# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.34/2022 | Date | : 23.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : வள்ளி | Calling | : |
| Husband Name | : பால்ராஜ் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.07.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடியில் வசித்து நெசவுத் தொழில் செய்து வருகிறேன். சுமார் 04 வருடத்திற்கு முன்பாக, காலை சுமார் 11.00 மணியளவில் எனது கணவர் பால்ராஜ், குமாரபாளையத்தில் உள்ள எனது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக குமாரபாளையம் to எடப்பாடி செல்லும் சாலையில் உள்ள புளியம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே அவருக்கு தெரிந்த நபரின் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்துகொண்டிருந்தபோது, எதிரே வந்த வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் அவருக்கு தலையில் அடிப்பட்டதாகவும் தகவல் சொன்னார்கள்.

2) நான் தகவல் அறிந்து குமாரபாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என்னுடைய கணவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

அவரின் பிரேதம் பிணவறையில் இருந்தது. அவருக்கு பின் தலையில் அடிப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக தேவூர் காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் ஒன்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

விபத்து பற்றி யார் எனக்கு தகவல் சொன்னது என்றால் எனது நாத்தனார் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். எனது வீட்டுக்காரர் யார் வாகனத்தில் சென்றார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எடப்பாடிக்கும், மயிலம்பட்டிக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும்.

Sd/-S.Sathiya,
Sd/-Valli Judicial Magistrate No.1,
Sankari.